இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 329 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 26 – வெள்ளிக்கிழமை 10 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 329 : Thiruvalluvar Year - 2057 - Aani 26 - Friday 10 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா! குதிரை பேரம் குறித்து

# த.வெ.க. அரசிடம் விளக்கம் கேட்க ஆளுநர் முடிவு!

## அரசுக்கு நெருக்கடி – அரசியல் நோக்கர்கள் கருத்து!

**சென்னை, ஜூலை 10 -**

**குதிரை பேரம் குறித்து த.வெ.க., அரசிடம் விளக்கம் கேட்க ஆளுநர் அர்லேக்கர் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

கடந்த மே மாதம் 7ம் தேதி ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரை விஜய் சந்தித்தார். அப்போது, தன் கட்சியின் ஒரே எம்.எல்.ஏ.வை குதிரை பேரம் நடத்தி இழுத்து விட்டதாக, த.வெ.க. மீது அ.ம.மு.க., பொதுச் செயலாளர் தினகரன் குற்றம்சாட்டினார்.

இதனையடுத்து த.வெ.க., ஆட்சி அமைத்த பின், அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்கள் 6 பேர் பதவியை ராஜினாமா செய்து விட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

மேலும், பல எம்.எல்.ஏ.க்களை இழுக்க த.வெ.க., முயற்சித்து வருவதாக, அ.தி.மு.க., குற்றம்சாட்டி வருகிறது. தங்கள் எம்.எல்.ஏ.க்களிடமும் த.வெ.க. பேரம் பேசியதாக தி.மு.க.வும் குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில், த.வெ.க.வின் குதிரை பேரம் மற்றும் அதிகார அத்துமீறல் குறித்து கடந்த 4ம் தேதி ஆளுநரை சந்தித்து தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி புகார் அளித்தார்.

இதேபோல், அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க., சார்பிலும் ஆளுநரிடம் புகார் மனு அளிக்கப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமாக்கள் தாமாக முன்வந்து செய்யப்பட்டவை அல்ல என்றும், அவை அரசியல் லஞ்சம் மற்றும் நிர்வாக செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்திப் பெறப்பட்டவை என்றும் குற்றம் சாட்டி, தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. தனித்தனியாக ஆளுநரிடம் மனு அளித்துள்ளன.

கட்சித் தாவல்கள் தொடர்பான சூழ்நிலைகளை ஆராயுமாறு லோக்பவனை வலியுறுத்தும் துணை ஆவணங்கள், பொது அறிக்கைகள் மற்றும் காணொளிக் காட்சிகள் அந்த மனுக்களில் அடங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

டி.வி.கே. தலைமையிலான கூட்டணியில் கட்சி இணைந்த பிறகு, ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை தங்கள் இடங்களை ராஜினாமா செய்யுமாறு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் கேட்டுக்கொண்டதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ முன்பு அளித்த பேட்டி ஒன்று, எதிர்க் கட்சியின் வாதத்தில் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் வெளியேற்றம் ஒரு தனிப்பட்ட நிகழ்வல்ல, மாறாக ஒரு பரந்த அரசியல் நடவடிக்கையின் ஒரு அங்கம் என்று வாதிட்டு, எதிர்க்கட்சி அந்த காணொளிப் பதிவைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிகிறது.

மாநிலத்தில் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், அரசியலமைப்புச் சட்ட தாக்கங்களைக் கொண்ட விஷயங்கள் குறித்து விரிவான கருத்துக்களை ஆளுநர் கோரியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்பின் 167வது பிரிவின் படி, மாநில நிர்வாகம் தொடர்பான விஷயங்களில் முதலமைச்சரிடமிருந்து தகவல்களைக் கோருவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பதவி விலகல்கள் மற்றும் அரசியல் பேரங்கள் நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து அரசின் தரப்பை ஆளுநர் கோருவதற்கு, அந்தச் சட்டப் பிரிவு போதுமான அரசியலமைப்பு அடிப்படையை வழங்குகிறது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

(திருச்சி கிழக்கு உட்பட) 7 சட்டமன்றத் தொகுதிகள் காலியாக உள்ளதாலும், இடைத்தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாததாலும், இந்த சர்ச்சை அரசியல் விவாதத்தை மேலும் கூர்மைப் படுத்தியுள்ளது.

தேர்தலுக்கு முன்னதாக எதிர்க்கட்சிகள் சர்ச்சையை உருவாக்குகின்றன என்று ஆளும் கட்சி குற்றம் சாட்டியுள்ள நிலையில், ராஜினாமாக்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து ஒரு சுதந்திரமான மற்றும் விரிவான விசாரணை தேவை என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆளுநர் அரசிடம் முறையாக விளக்கம் கோரினால், இவ்விவகாரமானது ஒரு அரசியல் மோதலைத் தாண்டி ஒரு அரசியலமைப்பு ரீதியான பதற்றச் சூழலாக முற்றிவிடக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

---

### அரசு மருத்துவமனைகளில் ஓ.பி. சீட் வாங்க

## ஆதார் மூலம் ஓ.டி.பி. பெறுவதில் சிக்கல்!

### புறநோயாளிகள் கடும் அவதி!

*சென்னை, ஜூலை 10 -*

அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் ஓ.டி.பி. பெறுவது கட்டாயம் என்ற புதிய நடைமுறையால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் பிரிவில் சீட்டு பெறுவதற்கு ஆதாருடன் லிங்க் செய்யப்பட்ட செல்போனில் ஓ.டி.பி. கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையால் தொலைபேசி இல்லாத மற்றும் ஓ.டி.பி. பெற முடியாத நோயாளிகள், வயதானவர்கள் கடும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து கலைஞர் செய்திகள் தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்த சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், அரசு மருத்துவமனைகளில் ஆதார் மூலம் ஓ.பி.சீட் பெரும் நடைமுறையில் பிரச்சனை உள்ளதாகவும், ஏராளமான நடைமுறை சிக்கல் உள்ள இந்த முறையால் பலர் பாதிக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.

---

### நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்

## அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராகச் செயல்படுகிறார்!

### ஓய்வு பெற்ற நீதிபதி அரி பரந்தாமன் குற்றச்சாட்டு!

*சென்னை, ஜூலை 10 -*

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக செயல்பட்டு வருகிறார் என்று ஓய்வு பெற்ற நீதிபதி அரி பரந்தாமன் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் தமிழ்நாடு ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு கூட்டு இயக்கம் சார்பில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. தி.மு.க. முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, ஓய்வு பெற்ற நீதியரசர் அரி பரந்தாமன், வழக்கறிஞர்கள் வாஞ்சிநாதன், பசும்பொன் பாண்டியன் உள்ளிட்டோர் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய ஓய்வு பெற்ற நீதிபதி அரி பரந்தாமன், மதம் மாறிய இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீட்டை ரத்து செய்து நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பு சட்டவிரோதமானது என்றும், சிறுபான்மையினரின் மத சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டிய கடமை நீதிமன்றத்துக்கு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

---

## ஆசிரியர் தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை!

*சென்னை, ஜூலை 10 -*

ஆசிரியர் தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசின் முடிவை வரும் 24ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும்; அதுவரை தேர்வு முடிவுகளை வெளியிடக் கூடாது; பொதுப்பிரிவினருக்கான குறைந்த பட்ச மதிப்பெண்ணை 60%ல் இருந்து 50% ஆக குறைக்கக் கோரிய வழக்கில் ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

---

## அரக்கோணத்தில் த.வெ.க. அமைச்சர் முற்றுகை!

அரக்கோணம், ஜூலை 10 –

அரக்கோணம் அரசு மருத்துவமனையில் ஆய்வுக்கு வந்த அமைச்சர் காந்திராஜை மக்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் சீட்டு பெறுவதற்காக ஓ.டி.பி. நடைமுறையானது கடந்த 2 நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்டது.

இதனால் நோயாளிகள் கடும் இன்னல்களை சந்தித்து வந்தனர். இந்நிலையில் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் ஆய்வு நடத்த அமைச்சர் காந்திராஜ், ஆட்சியர் பிரியா வந்திருந்தனர்.

ஆய்வு செய்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் அமைச்சரிடம்; ஓ.டி.பி. நடைமுறையால் 2ல் இருந்து 3 மணி நேரத்துக்கும் மேலாக புறநோயாளிகள் சீட்டு பெற முடியாமல் காத்திருப்பதாகவும், சில நோயாளிகள் மயங்கி விழக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சரிடம் புகார் தெரிவித்தனர். நோயாளிகள் அமருவதற்கு இருக்கைகள் இல்லை என பல்வேறு கேள்விகளை பொதுமக்கள் எழுப்பி முற்றுகையிட்டனர். இதனால் அரசு அதிகாரிகள் சற்று திணறி நின்றனர்.

தொடர்ந்து இருக்கை வசதிகளை அமைத்துத் தர ஆட்சியர் உடனடியாக மருத்துவத் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

---

### 'தூய சக்தி' ஆட்சியின் லட்சணம் பாரீர்! அரசு வழக்கறிஞர் பணிக்கு

# அமைச்சர் - காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் சிபாரிசு!

### சட்டத்துறை அமைச்சரின் நேர்மை என்ன ஆனது?

**சென்னை, ஜூலை 10 -**

**அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு அமைச்சர் சம்பத்குமார் வழங்கிய பரிந்துரை கடிதம் வெளியாகி சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது.**

த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின் ஆவின் தலைவர், அரசு வழக்கறிஞர் உட்பட பல்வேறு நியமனங்களில் அக்கட்சி நிர்வாகிகள் வசூல் வேட்டையில் இறங்கியதாகப் புகார்கள் எழுந்தன.

குறிப்பாக அரசு வழக்கறிஞர் பதவிக்கு 30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெறப்படுவதாக த.வெ.க. நிர்வாகிகளே சிலர் பொதுவெளியில் குற்றம் சாட்டினர்.



To
Thiru CTR Nirmal Kumar
Hon'ble Minister for Energy Resources & Law
Government of Tamil Nadu

1st June 2026

Re: Recommendations for Appointment as Counsel for State of Tamil Nadu

Thiru Nirmal Kumar ji

Under the aegis of Dr. Abhishek Manu Singhvi (Chairman, AICC Law, Human Rights & RTI Dept., Senior Member of Parliament & Senior Advocate Supreme Court of India) a Committee was set up to prepare a list of counsel capable of representing the State of Tamil Nadu in the Courts across Tamil Nadu and the Supreme Court at New Delhi.

Apropos Dr. Singhvi's directions, the Committee, comprising the Undersigned (s), conducted a detailed discussion on each counsel's profile as well as capability and finally presented a list for Dr. Abhishek Manu Singhvi's approval.

The list of counsel as approved by him is enclosed with this letter for your consideration and requisite action.

With Regards

Girish Chodankar Suraj Hegde R Sudha

இந்நிலையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமார் பெயரில், ஒரு வழக்கறிஞரை கோவை சிறப்பு நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் பதவிக்கு பரிந்துரைக்கும் கடிதம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவிவருகிறது.

இதேபோல் காங்கிரஸ் கட்சியின் தமிழக பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கரும் பரிந்துரை கடிதம் கொடுத்துள்ள விவரமும் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவைகளைக் காணும் போது அரசு வழக்கறிஞர்கள் நியமனம் என்பது அரசியல் பரிந்துரைகள் மூலமாக நடைபெறுகிறதா என்கிற சந்தேகம் எழுகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரச்சினைக்கு உரிய ஒருவர் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டிருப்பது கூட இதுபோன்ற பரிந்துரைகளால்இருக்கலாமோ என்கிற கருத்து பரவலாக உள்ளது.

இந்நிலையில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் நேர்மையாக நடைபெறுவதாக அமைச்சர் நிர்மல்குமார் கூறிய நிலையில், அமைச்சர் சம்பத் குமார் வழங்கிய பரிந்துரை கடிதம் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

---

### ரீல்ஸ் அமைச்சர் கீர்த்தனாவின் செயலால்

## அண்டை மாநிலங்களை நோக்கிச் செல்லும் தொழிற்சாலைகள்!

### வேடிக்கை பார்க்கும் முதல்வர்!

*சென்னை, ஜூலை 10 -*

த.வெ.க. அரசின் தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா ரீல்ஸ்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டிலிருந்து சப்தமில்லாமல் தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கிச் சென்று கொண்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் இந்தியாவிலேயே தொழில்துறையில் வளர்ந்த மாநிலமாக திகழ்ந்து கொண்டிருந்த தமிழ்நாடு, தற்போது த.வெ.க. ஆட்சியில் வெறும் 50 நாட்களிலேயே பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, தன் துறை மீது அக்கறை காட்டாமல் ரீல்ஸ் வெளியிடுவதிலேயே ஆர்வம் காட்டி வருகிறார்.

இதனால் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் தொழில்நிறுவனங்கள் சப்தமின்றி அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் தெலுங்கானாவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

இதேபோல், தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய மிகப்பெரிய முதலீடுகளை இம்மாநிலங்களே அள்ளிச் செல்கின்றன.

முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருந்த தமிழ்நாடு, த.வெ.க. ஆட்சியில் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளதாக பலரும் குற்றம்சாட்டியுள்ளனர்.

விஜய் ஆட்சியில் தமிழ்நாட்டின் தொழில் துறை மிக மோசமான நிலையில் இருப்பதாக பொருளாதார வல்லுநர்களும், தொழில்துறையினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேநிலை தொடர்ந்தால் அடுத்த சில ஆண்டுகளில் மிகப்பெரிய வேலை வாய்ப்புகளையும், பொருளாதார வளர்ச்சியையும் அண்டை மாநிலங்களிடம் தமிழ்நாடு இழக்க நேரிடும் என்று தொழில் துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.